**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

**முன்னிலை:- திரு.எம். ரவிச்சந்திரன், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.**

2057 திருவள்ளுவராண்டு, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 13ம் நாள்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை அசல் மனு எண்.52/2024</u>

<u>(CNR No.TNTV14-000239-2024)</u>

சோபியா ...... மனுதாரர்

எதிராக

1) ரமேஷ்குமார்

2) கிளை மேலாளர்,

ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்.,

புதுச்சேரி. ........ எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது கடந்த 26.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.வி.செந்தில்குமார், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சதீஸ்குமார், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கார்த்திகேஸ், எம்.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்........

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 19.10.2022ம் தேதி மதியம் 2.30 மணியளவில் திருத்துறைப்பூண்டி – முத்துப்பேட்டை இ.சி.ஆர். மெயின்ரோடு அம்மளூர் வளைவு பழனிவேல் நிலம் அருகில் நடந்த சாலை விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக ரூ.6,00,000/– இழப்பீடு கோரி மனுதாரர் இம்மனுவை மோட்டார் வாகன விபத்துக்கள் சட்டம் பிரிவுகள் 166 & 140–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் :–**

விபத்தில் காயம்பட்ட மனுதாரரான சோபியா என்பவர் 38 வயதுடையவர் என்றும், விவசாயம் மற்றும் காளவாய் தொழில் செய்து மாதம் ரூ.30,000/– சம்பாதித்து வந்தார் என்றும், மனுதாரரும் மற்றும் சிலரும் அறுவடை செய்த நெல்லை அம்மளூர் வளைவில் கடந்த 19.10.2022 அன்று மதியம் 2.30 மணியளவில் டீ குடித்து கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 50 AT 6145 TATA ACE Four wheeler வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், சாலை விதிகளை அனுசரிக்காமலும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து லெட்சுமணன், தர்மலிங்கம், சோபியா, வெற்றிச்செல்வி ஆகியோர்கள் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினர் என்றும், இந்த விபத்தில் மனுதாரர் உள்ளிட்ட அனைவருக்கும் காயம் ஏற்பட்டது என்றும், இந்த விபத்தில் மனுதாரருக்கு எலும்பு முறிவு மற்றும் உடலெங்கும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் பின்னர் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில்

சிகிச்சை பெற்றும் நாளது தேதி வரையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ii) இந்த விபத்து குறித்து எடையூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.226/2022 இ.த.ச பிரிவு 279, 337, 338–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து ஏற்படுத்திய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், 1வது எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரும் ஆவார் என்றும், 1வது எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை 2வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளார் என்றும், ஆதலால் எதிர்மனுதாரர்கள் அவசியம் மற்றும் உரிய தரப்பாராக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும், மனுதாரர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டு தொகையினை எதிர்மனுதாரர்கள் சட்டப்பூர்வமாகவும், நியாயமாகவும் சேர்ந்தோ அல்லது தனித்தோ ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு லட்சம்) இழப்பீடாக கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. <u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u> :–

இந்த மனுவில் காணப்படும் அனைத்து முக்கிய குற்றச்சாட்டுகளையும் 2ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார் என்றும், மேலும் அவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், இந்த மனு தவறானது என்றும், எனவே இது லிமினியில் தள்ளுபடி செய்யப்படுவதற்கு உட்பட்டது என்றும், விபத்து நடந்த தேதியில் இந்த 2ம் எதிர்மனுதாரர் பதிவு எண்.TN 50 AT 6145 கொண்ட TATA Ace இன் காப்பீட்டாளர் அல்ல என்றும், மேலே குறிப்பிடப்பட்ட வாகனம் விபத்தில் சிக்கியது என்பது மறுக்கப்படுகிறது என்றும், மேலும் இது 1வது

எதிர்மனுதாரரின் அதிவேக மற்றும் அலட்சியமான ஓட்டுதலால் ஏற்பட்டது என்றும், மேலும், மனுதாரரும் வேறு சிலரும் அறுவடை செய்யப்பட்ட நெல்லை சாலை வளைவில் உலர்த்தும்போது, சாலை விதிகளை கவனிக்கவில்லை என்றும், கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TATA வாகனம் வருவதை கவனிக்கத் தவறிவிட்டனர் என்றும், அது ஒரு வளைவு என்பதால், முதல் எதிர்மனுதாரர் சாலையின் நடுவில் மக்கள் அமர்ந்திருப்பதை எதிர்பார்க்கவில்லை என்றும், முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மிகுந்த கவனத்துடன் பிரேக்கைப் பயன்படுத்தி, அவர்களைப் பார்த்ததும் ஹாரனை அடித்தபோது, மனுதாரரும் மற்றவர்களும் சாலையின் நடுவில் அமர்ந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர் என்றும், எனவே, விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே பொறுப்பு அல்ல என்றும், இதனால், விபத்து நடந்த நேரத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஓட்டுநர் அவசரமாகவோ அல்லது அலட்சியமாகவோ இருக்கவில்லை என்றும், மனுவில் கூறப்பட்ட விபத்தின் தன்மை மற்றும் விதம் கண்டிப்பாக மறுக்கப்படுகிறது.

ii) மனுதாரரும் மற்றவர்களும் பொதுமக்கள் அணுகுவதற்காக அமைக்கப்பட்ட சாலையில் அமர்ந்திருந்தனர், அதுவும் எந்த ஓட்டுநரும் எதிர்பார்க்க முடியாத சாலையின் வளைவில் அமர்ந்திருந்தனர் என்றும், மேலும் இது விபத்துக்கு முதன்மையான காரணமாக அமைந்தது. இது பங்களிப்பு அலட்சியத்திற்கு சமமானதால், 2வது எதிர்மனுதாரர் எந்த வகையிலும் பொறுப்பல்ல என்றும், மனுவில் வாகனப் பதிவுகளும் இல்லை என்றும், விபத்து நடந்ததாகக் கூறப்படும் தேதியில் முதல் எதிர்மனுதாரரின் வாகனம் அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும்

கொண்டிருந்தது என்பதை மறுக்கிறார் என்றும், விபத்தில் சிக்கிய வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், விபத்து நடந்த நேரத்தில் பாலிசி நடைமுறையில் இருந்தது என்பதையும் மறுக்கிறார், விபத்தின் போது மனுதாரருக்கு உடல் முழுவதும் எலும்பு முறிவு மற்றும் சிராய்ப்புகள் ஏற்பட்டதாக மறுக்கப்படுகிறது. மனுவில் கூறப்பட்டுள்ளபடி, அவர் ஒரு உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்பதற்கான ஆதாரத்தை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரருக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்பது அறியப்படுகிறது. மேற்கூறிய உண்மையை நிரூபிக்க மனுதாரர் எந்த ஆவண ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை.

iii) மனுதாரரின் கூறப்பட்ட வயது, அவருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படும் காயங்கள், அதன் தன்மை மற்றும் தீவிரம், அவருக்கு வழங்கப்பட்ட முறையான மருத்துவ கவனிப்பு, சிகிச்சையின் காலம், காயங்களின் பின்விளைவுகள், மருத்துவச் செலவுகள், வருமான இழப்பு, கூடுதல் ஊட்டச்சத்துக்கான கோரிக்கை, போக்குவரத்துக் கட்டணங்கள், ஆடைகள் மற்றும் பொருட்களுக்கு ஏற்பட்ட சேதங்கள், உதவிச் செலவுகள், வலி மற்றும் துன்பத்திற்கான கோரிக்கை, எதிர்காலத்தில் ஏற்படும் இழப்புகள், இயலாமை என கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆகியவற்றை இந்த 2ம் எதிர்மனுதாரர் மறுக்கிறார் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அவரது வழக்கறிஞர் எதிருரை இல்லை எனவும், வாய்மொழி மற்றும் ஆதார ஆவண சாட்சியம் இல்லை என கூறியுள்ளார்.

**<u>5. பிரச்சனை</u>:-**

1. இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?

2. மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார்?

3. மனுதாரர் இழப்பீடு பெற உரிமையுள்ளவரா, அவ்வாறெனில் அவருக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கதக்கது?

**6.** மனுவில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் சோபியா என்பவர் **ம.சா.1**ஆக விசாரிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.1**ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றவாணங்கள் இல்லை. வழக்கு நிலுவையில் இருந்தபொழுது இந்நீதிமன்றத்தில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 170-ன் கீழ் 2ம் எதிர்மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

**7. <u>பிரச்சினை எண்.1க்கு தீர்வு:-</u>**

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய மேற்படி பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்ப்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு மனுதாரர் சோபியா என்பவர் ம.சா.1ஆக சாட்சியம் அளித்துள்ளார். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழிக்காட்டுதலின்படி மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுவில் விபத்து நடந்த விதம் பற்றி மனுதாரர்

குற்றவியல் வழக்கை போல சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய வழக்கின் சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலையை (Preponderance of Probabilities) நிரூபணம் செய்தாலே போதுமானதாகும்.

**8. ம.சா.1 தனது சாட்சியத்தில்**

" நானும் மற்றும் சிலரும் அறுவடை செய்த நெல்லை அம்மளூர் வளைவில் காய வைக்கும்போது டீ வாங்கி சாலையின் ஓரமாக அமர்ந்து கொண்டு கடந்த 19.10.2022 அன்று மதியம் 2.30 மணியளவில் டீ குடித்து கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TN 50 AT 6145 TATA ACE Four wheeler என்ற வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், சாலை விதிகளை அனுசரிக்காமலும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து என்னுடன் இருந்த லெட்சுமணன், தர்மலிங்கம், வெற்றிச்செல்வி ஆகியோர்கள் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தினார். " என சாட்சியம் அளித்துள்ளார்.

**9. ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கையில்**

" 19.10.2022ம் தேதி தர்மலிங்கம் என்பவரது வயலில் அறுவடை செய்த நெல்லை ECR ரோட்டில் உள்ள அம்மளூர் வளைவு அருகே ரோட்டில் நெல்லை கொட்டி காயவைப்பதற்கு நானும், என்னுடன் தர்மலிங்கமும், அவரது மனைவி சோபியாவும், தர்மலிங்கத்தின் அம்மா வெற்றிச்செல்வி என்பவருடன் சேர்ந்து வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது மதியம் சுமார் 2.30 மணியளவில்

நெல்லை ரோட்டில் பரப்பி காய வைத்துவிட்டு டீ குடிப்பதற்காக திருத்துறைப்பூண்டி to முத்துப்பேட்டை செல்லும் ECR மெயின் ரோட்டில் அம்மளூர் வளைவு அருகே உள்ள பழனிவேல் என்பவரது நிலத்தின் தென்புறம் உள்ள புல் பரப்பில் வாங்கி வந்த டீ யை குடிப்பதற்கு ஊற்றி கொண்டிருந்த போது திடீரென்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்த TATA ACE போன்ற நான்கு சக்கர வாகனம் அதிவேமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து நாங்கள் டீ குடித்து கொண்டிருந்த இடத்தின் அருகே உள்ள வேகத்தடையை குறிக்கும் எச்சரிக்கை பலகை கம்பத்தின் மீது மோதி பிறகு எங்கள் நால்வரின் மீதும் மோதி கட்டுபாடின்றி அருகில் இருந்த மின் கம்பத்தில் மோதி நின்றது மேற்கண்ட விபத்தில் காயமடைந்த எங்கள் நால்வரையும் அப்போது அருகில் நெல் காய வைத்துக்கொண்டிருந்தவர்கள் மற்றும் அருகில் உள்ள கடைக்காரர்கள் ஓடி வந்து எங்களை தூக்கி தண்ணீர் கொடுத்து உட்கார வைத்துவிட்டு போன் மூலம் 108 ஆம்புலன்சிற்கு தகவல் தெரிவித்தனர். விபத்தினை ஏற்படுத்திய வாகனம் மற்றும் வாகன ஓட்டுநர் பற்றி விசாரித்து தெரிந்து கொண்ட போது TN 50 AT 6145 TATA ACE INTRA என்பதும், அதனை ஓட்டி வந்தவர் திருத்துறைப்பூண்டியை சேர்ந்த முத்துப்பேட்டை மெயின் ரோட்டில் வசிக்கும் சுப்பிரமணியன் மகன் ரமேஷ்குமார் என தெரியவந்தது. "

என கண்டு எழுதப்பட்டுள்ளதையும் இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டது. மேலும், ம.சா.1–ன் வாய்மொழி சாட்சியம்

ம.சா.ஆ.1ஆன முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.4ஆன விபத்து பதிவேடு, ம.சா.ஆ.7ஆன காயச்சான்றிதழ் மற்றும் நீ.ம.சா.ஆ.1 ஆகிய ஆவணங்களின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த வழக்கில் மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டது என்பதையும், அந்த விபத்திற்கு TN 50 AT 6145 TATA ACE வாகனத்தை ஓட்டிய (ரமேஷ்குமார் ) ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் கவனக்குறைவும் தான் இவ்விபத்திற்கு காரணம் என இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து 1–வது பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**10. பிரச்சனை எண்.2க்கு தீர்வு :–**

விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநர் தான் என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இம்மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பது குறித்து பரிசீலிக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் விபத்திற்கு காரணமான TN 50 AT 6145 TATA ACE வாகனமானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது **ம.சா.ஆ.5** ஆவணமான விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி.புக் மூலமாகவும், அந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது **ம.சா.ஆ.2** ஆவணமான இன்சூரன்ஸ் பாலிசியின் மூலம் அறிய முடிகிறது. மேலும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநருக்கு முறையான, சரியான ஓட்டுநர் உரிமம் இருந்துள்ளது என்பது **ம.சா.ஆ.6** ஆவணமான ஓட்டுநர் உரிமத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்த்ததில் கீழ்கண்ட முன் தீர்ப்பின் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்வு காண விரும்புகிறது. **IN THE SUPREME COURT OF INDIA CIVIL APPELLATE JURISDICTION, CIVIL**

**APPEAL NO.5826 OF 2011 , MUKUND DEWANGAN ...APPELLANT(S) VERSUS ORIENTAL INSURANCE COMPANY LIMITED ... RESPONDENT(S)** ஒரு போக்குவரத்து வாகனம் மற்றும் பேருந்து, இவற்றில் ஏதேனும் ஒன்றின் மொத்த வாகன எடை 7500 கிலோகிராமுக்கு மிகாமல் இருந்தால், அது ஒரு இலகுரக மோட்டார் வாகனமாகும் என்றும், மேலும், மோட்டார் கார் அல்லது டிராக்டர் வாகனத்தின் 'சுமையற்ற எடை' 7500 கிலோகிராமுக்கு மிகாமல் இருந்தால், மற்றும் பிரிவு 10(2)(d)-இல் வழங்கப்பட்டுள்ளபடி "இலகுரக மோட்டார் வாகனம்" வகுப்பை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பவர், மொத்த வாகன எடை 7500 கிலோகிராமுக்கு மிகாத ஒரு போக்குவரத்து வாகனம் அல்லது பேருந்தையோ அல்லது "சுமையற்ற எடை" 7500 கிலோகிராமுக்கு மிகாத ஒரு மோட்டார் கார் அல்லது டிராக்டர் ஓட்டுவதற்குத் தகுதியானவர் ஆவார் என தீர்வு கண்டுள்ளதை பின்பற்றி இந்நீதிமன்றம் மேற்கண்ட விபத்து தீர்ப்பாய மனுவில் டாடா ஏஸ் ரக வாகனங்கள் பொதுவாக, அதன் வேரியன்ட் மற்றும் எரிபொருள் வகையைப் (பெட்ரோல், டீசல், சிஎன்ஜி) பொறுத்து, 1,460 கிலோ முதல் 1,835 கிலோவரையிலான மொத்த வாகன எடையைக் (GVW) கொண்டுள்ளன . டாடா ஏஸ் கோல்டு போன்ற மிகவும் பொதுவான மாடல்கள், வழக்கமாக 1,815 கிலோ முதல் 1,835 கிலோ வரையிலான மொத்த வாகன எடையைக் கொண்டுள்ளதான் அடிப்படையில் மேற்படி விபத்தில் ஈடுபட்ட வாகனத்தின் எடை தோராயமாக 2000 கிலோ எடையை கொண்டது என முடிவு செய்து அதற்கு **ம.சா.ஆ.6** ஆவணமான ஓட்டுநர் உரிமத்தில் LMV ஓட்டுநர் உரிமம் மட்டும் வைத்திருந்தால் டாடா ஏஸ் நான்கு சக்கர வாகனத்தை ஓட்டலாம் என மேற்கண்ட முன் தீர்ப்பில் தீர்வு கண்டு இருப்பதாலும் 2ம்

எதிர்மனுதாரர் தரப்பில் ஓட்டுநருக்கு HMV உரிமம் இல்லை என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநருக்கு HMV உரிமம் இல்லை என கூறும் கூற்று ஏற்கதக்கதல்ல இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

ii) மேற்படி வாகனத்திற்கான காப்பீடு 15.03.2022 முதல் 14.03.2023 வரை அமலில் இருந்துள்ளது என்பதை அறியப்படுகிறது. இந்நிலையில் வழக்கின் சம்பவமானது 19.10.2022–ம் தேதி அன்று நடைபெற்றுள்ளது என்பதும், மேலும் இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 50 AT 6145 TATA ACE வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்து ஏற்பட்டுள்ளது என்பதாலும், 1ம் எதிர்மனுதாரருடைய வாகனமானது 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் உள்ளதாலும் 2ம் எதிர்மனுதாரர் தான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என பிரச்சனை எண்.2க்கு தீர்வு காணப்படுகிறது.

**<u>11. பிரச்சனை எண்.3க்கு தீர்வு</u>**

இந்த மனுவில் மனுதாரர் சோபியா என்பவர் ம.சா.1ஆக விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தரப்பு சாட்சியத்திலிருந்தும், ஆவண சாட்சியத்திலிருந்தும் மனுதாரருக்கு எலும்பு முறிவு மற்றும் உடலெங்கும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டு திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் பின்னர் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் நாளது தேதி வரையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று

வருகிறார் என தெரியவருகிறது. மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனத்தின் அளவை கணக்கிட மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டார். அவரை பரிசோதித்த குழுமம் வழங்கிய அறிக்கையில் மனுதாரருக்கு 7% ஊனம் ஏற்பட்டதாக கருத்து கூறி **நீ.ம.சா.ஆ.1** ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கணக்கீட்டிற்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின்** N.Kannan Vs. P.Rajendran and another, C.M.A.No.1918 of 2025 Date of Disposal.25.07.2025-ல் வழங்கியுள்ள முன் தீர்ப்பு நெறிகளை மேற்கோள்காட்டி இவ்வழக்கில் விபத்தானது 2022-ல் நடந்துள்ளது என்பதால் 1 சதவீத ஊனத்திற்கு ரூ.9,000/- வீதம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதை பின்பற்றி அதன்படி ஒரு சதவீத ஊனத்திற்கு ரூ.9000/- வீதம் கணக்கிட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது 7% என்பதால் (7%x9000) அவர் ரூ.63,000/- இழப்பீடாக இந்த தலைப்பின் கீழ் பெற உரிமையுள்ளவர் ஆவார். மனுதாருக்கு வலி, வேதனை இருந்திருக்கும் எனவே வலி, வேதனை என்ற தலைப்பின் கீழ் மனுதாரருக்கு ரூ.15,000/-ம் வழங்கிட இத்தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரர் விபத்திற்கு முன்பு விவசாயம் மற்றும் காளவாய் தொழில் செய்து மாதம் ரூ.30,000/- வருமானம் ஈட்டி வந்ததாக மனுவில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை மெய்ப்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகையால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய கீழ்கண்ட முன்தீர்ப்பின்படி தீர்வு காண விரும்புகிறது.

1) **Managing director,TNSTC villupuram Vs. Seetha lakshmi** dated:03.04.2017, CMA No.1132/2017, the Hon’ble Madras High court has fixed

the monthly income Rs.7000/- in the year 2012, for a non mazdoor staff of PWD, following the Judgement of the Hon'ble Supreme Court in syed sadiq and others Vs. DM UIIC LTD., [CD] 2014 (SC) 044] wherein, the Honorable Supreme Court fixed the monthly income of a vegetable vendor, at Rs.6500/- in the year 2008.

2) In **Andal and others Vs Avinav Kannan and New India Assurance Co Ltd,** reported in 2019 (1) TNMAC 54, The Hon'ble Madras High Court while fixing the income for a meat chopper who had died on 07.02.2014, has taken his income Rs.6500/- in the year 2007-2008 and multiplying it with the cost of inflation index for the year 2013-2014 and then driving the result with the cost of inflation index for the year 2007-2008 (Rs.6500/-*220/129) has arrived at the income at Rs.11,085/- and has rounded off the same at Rs.11,000/- per month.

3) In **Kirti Vs Oriental Insurance Company**, the Hon'ble Supreme Court has approved the adopting of minimum wages prescribed by the Government for skilled workers, in a case where no evidence or documents were produced to show the income of the deceased.

4)In **CIVIL APPEAL NO.615OF 2021 [Arising out of S.L.P.(C) No.6466 of 2019] Chandra @ Chanda @ Chandraram & Anr. Versus Mukesh Kumar Yadav & Ors**, the Hon'ble Supreme Court has held that in the absence of salary certificate, the minimum wage notification can be a yardstick but at the same time cannot be an absolute one to fix the income of the deceased.

மேற்கண்ட முன் தீர்ப்புகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் முடிவுசெய்து ஒரு விவசாயியோ, தொழிலாளியாகவோ, வேறு இதர வேலை செய்பவராக இருந்தாலும் குறைந்தபட்ச ஊதிய சட்டப்படி ஒரு நாளைக்கு ஊதியமாக ரூ.400 எளிதாக சம்பாதித்திருப்பார் என்றும், நாள் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.12,000/- சம்பாதித்து

இருப்பார் என இந்நீதிமன்றம் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் மனுதாரர் மாதம் ரூ.12,000/– வருமானம் ஈட்டியிருக்க கூடும் என்று முடிவு செய்து அவர் 3 மாதம் ஓய்வில் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்பதால் மனுதாரருக்கு ஏற்பட்ட வருமான இழப்பீட்டிற்காக (மாத வருமானம் 12000x 3மாதம்) ரூ.36,000/–மும், ஊட்டச்சத்து உட்கொண்ட வகையில் அவருக்கு ரூ.10,000/–ம், உதவியாளர் செலவிற்காக ரூ.10,000/–ம், போக்குவரத்து செலவிற்காக ரூ.10,000/–ம், வாழ்க்கை வசதி இழப்பீட்டிற்காக ரூ.5,000/–மும் வழங்கலாம் என்று இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

**12.** மனுதாரர் சோபியா என்பவருக்கு கீழ்க்கண்டவாறு இழப்பீட்டுத் தொகை கிடைக்கதக்கதாகும்.

| | |
|---|---|
| 7% ஊனத்திற்கு (7%x9000) | ரூ.63,000/– |
| வலி வேதனைக்கு | ரூ.15,000/– |
| வருமான இழப்பீடுக்கு (12000x3) | ரூ.36,000/– |
| ஊட்டச்சத்து உணவு | ரூ.10,000/– |
| உதவியாளர் செலவு | ரூ.10,000/– |
| போக்குவரத்து செலவு | ரூ.10,000/– |
| வாழ்க்கை வசதி இழப்பீடு | ரூ.5,000/– |
| மொத்தம் | ரூ.1,49,000/– |

**13.** இந்த மனுவில் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக மொத்தம் ரூ.1,49,000/- சரியான தகுந்த இழப்பீடு என முடிவு செய்து அதற்கு மனு தேதியிலிருந்து தொகை வசூலாகும் வரை தவறுகையினால் தள்ளுபடியாக காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக மீதி காலத்திற்கு 7.5% வட்டியுடன் சேர்த்து வழங்கி உத்தரவிட முடிவு செய்யப்படுகிறது. மேற்படி இழப்பீட்டு தொகையானது நியாயமான தகுந்த இழப்பீட்டுத் தொகை எனவும் இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கிறது. மனுதாரருக்கான மேற்படி இழப்பீட்டு தொகையினை அவருக்கு மாண்புமிகு சென்னை **உயர்நீதிமன்றம்** The Divisional Manager, The Oriental Insurance Company Ltd., Kannur Vs. Rajesh & Others **என்ற வழக்கில்** 2016(1) TN MAC 433–ல் பிரசுரிக்கப்பட்ட முன்தீர்ப்பில் கண்ட வழிமுறைகளின்படி செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வாறாக பிரச்சனை எண்.3க்கு தீர்வு காணப்படுகிறது.

**14.** இறுதியாக, மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்பட்டும், ரூ.1,49,000/-ஐ, 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இழப்பீடாக மனு தாக்கல் நாள் (19.09.2024) முதல் தொகை வைப்பீடு செய்யப்படும் நாள் வரை 7.5% வட்டியுடன் சேர்த்து இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கில் (தவறுகையினால் தள்ளுபடியான காலம் ஏதேனும் இருப்பின் அது நீங்கலாக) வழங்க வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டு தொகையை 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற **திருத்துறைப்பூண்டி ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கணக்கு எண்**.000000 42903368477 **(IFSC Code SBIN0000936)**

கணக்கில் பணத்தை வைப்பீடு செய்ய வேண்டும். மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையை மனுதாரர் தன்னுடைய வங்கி கணக்கு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உரிய நீதிமன்ற உத்தரவின்படி வங்கியின் NEFT/RTGS பரிவர்த்தனை மூலமாக பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மனுதாரரின் காயத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், விபத்தானது 2022–ல் ஏற்பட்டுள்ள காரணத்தினாலும் இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்குரிய மனுதாரர் செலுத்த வேண்டிய பற்றாக்குறை நீதிமன்ற கட்டணமாக ரூ.490/– உத்தரவு தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஊதியம் ரூ.5,980/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழ மண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் –எதிர்– அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272** என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்தரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கின்றது.

என்னால் சுருக்கெழுத்தரிடம் வாய்மொழியாக சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்படடு பின் என்னால் சரிப்பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.31 13:49:35 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.

**<u>செலவுத் தொகை பட்டியல்</u>**

| மனுதாரர் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 862 | 50 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| நீதிமன்ற ஆவண கட்டணம் | 40 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 5980 | 00 |
| சம்மன்படி | 9 | 00 |
| தட்டச்சு கூலி | 100 | 00 |
| மொத்தம் | 7001 | 50 |

(இம்மனுவின் செலவுத் தொகையான ரூ.7,002/–ஐ 2ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

1. **<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:–**

ம.சா.1 சோபியா (மனுதாரர்)

2. **<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 19.10.2022 | முதல் தகவல் அறிக்கை – நகல் |
| ம.சா.ஆ.2 | 15.03.2022 முதல் 14.03.2023 வரை | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசி – நகல் |
| ம.சா.ஆ.3 | 26.10.2022 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை – நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.4 | 19.10.2022 | விபத்து பதிவேடு– நகல் |
| ம.சா.ஆ.5 | 21.01.2020 | விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆர்.சி.புக் – நகல் |
| ம.சா.ஆ.6 | 09.12.2025 | ஓட்டுநர் உரிமம் – நகல் |
| ம.சா.ஆ.7 | 19.10.2022 | மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழ் – நகல் |
| ம.சா.ஆ.8 | -- | மனுதாரர் பெயரில் உள்ள ஆதார் அட்டை(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) – நகல் |

3. **நீதிமன்ற சான்றாவணம்**:–

| | | |
|---|---|---|
| நீ.ம.சா.ஆ.1 | 13.10.2025 | திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் |

4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

M RAVICHANDRAN

Digitally signed by M RAVICHANDRAN
Date: 2026.03.31 13:49:42 +0530

இயக்கவூர்திகளின் விபத்து இழப்பீடு கோருரிமை,
தீர்ப்பாய நடுவர்/ சார்பு நீதிபதி, திருத்துறைப்பூண்டி.